**கவனிக்க.-** *27.07.2012 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி I: தொகுதி (III) மற்றும் பகுதி II ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 1771 - 2012 අගෝස්තු මස 10 වැනි සිකුරාදා - 2012.08.10**

*1771 ஆம் இலக்கம் - 2012 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 10 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I) - பொது

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| சனாதிபதியின் பிரகடனங்களும் பிறவும் | - |
| சனாதிபதியின் நியமனங்களும் பிறவும் | 808 |
| அமைச்சரவையின் நியமனங்களும் பிறவும் | - |
| அரசாங்க ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும் | - |
| நீதிச்சேவை ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும் | - |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | - |
| பதிவாளர் நியமனங்களும் பிறவும் | - |
| அரசாங்க அறிவித்தல்கள் | 810 |
| விலைக் கட்டளைகள் | - |
| இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள் | - |
| இலங்கை அரசாங்க கணக்கு விபரங்கள் | - |
| வரவு செலவுத் திரட்டுக்கள் | - |
| அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள் | 812 |
| மாலுமிகளுக்கு அறிவித்தல்கள் | - |
| மதுவரிக் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

## முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்,** அதாவது 2012, ஓகத்து மாதம் 30 ஆந் திகதி வியாழக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2012, ஓகத்து மாதம் 17 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**பி. கே. எஸ். ரவீந்திர,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2012 ஆம் ஆண்டு யூன் மாதம் 23 ஆந் திகதி.

# சனாதிபதியின் நியமனங்களும் பிறவும்

2012 இன் இல. 582

எம்ஓடி/டீஈஎப்/02/01/ஏஆர்எப்/ஆர்ஈ/104.

**இலங்கை தரைப்படை - நிரந்தரப் படை**

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட
பதவி நிரந்தரமாக்குதலும் இளைப்பாறுதலும்

**பதவி நிரந்தரமாக்குதல்**

பின்வரும் பெயருடைய சிரேஷ்ட உத்தியோகத்தர் 2012, மாச்சு மாதம் 20 ஆந் திகதியிலிருந்து லெப்டினன்ட் கர்னல் பதவியில் நிரந்தரமாக்குதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது :-

தற்காலிக லெப்டினன்ட் கர்னல் ஜயலத் பந்துல வேகரம, பீஎஸ்சீ, இபஉப (உ/61499)

**இளைப்பாறுதல்**

பின்வரும் பெயருடைய சிரேஷ்ட உத்தியோகத்தர் 2012, மாச்சு மாதம் 21 ஆந் திகதியிலிருந்து இலங்கைத் தரைப்படையின் நிரந்தரப் படையிலிருந்து இளைப்பாறுதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது :-

லெப்டினன்ட் கர்னல் ஜயலத் பந்துல வேகரம, பீஎஸ்சீ, இபஉப (உ/61499)

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பும் நகர அபிவிருத்தியும் அமைச்சு.

பாதுகாப்பும் நகர அபிவிருத்தியும் அமைச்சு,
கொழும்பு,
2012, மாச்சு 16.

8-429

---

2012 இன் இல. 583

எம்ஓடி/டீஈஎப்/02/01/ஏஆர்எப்/ஆர்ஈ/160.

**இலங்கை தரைப்படை - நிரந்தரப் படை**

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட
இளைப்பாறுதல்

**இளைப்பாறுதல்**

பின்வரும் பெயருடைய உத்தியோகத்தர் 2012, யூன் மாதம் 15 ஆந் திகதியிலிருந்து இலங்கை தரைப்படை நிரந்தரப் படையிலிருந்து இளைப்பாறுதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது :-

மேஜர் மத்தும காமினி பிரியந்த தொடன்கொடகே, பீஎஸ்சீ, இசிரெ (உ/62704)

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பும் நகர அபிவிருத்தியும் அமைச்சு.

பாதுகாப்பும் நகர அபிவிருத்தியும் அமைச்சு,
கொழும்பு,
2012, மே 30.

8-296

---

2012 இன் இல. 584

எம்ஓடி/டீஈஎப்/02/01/ஏஆர்எப்/ஆர்ஈ/113.

**இலங்கை தரைப்படை - நிரந்தரப் படை**

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட
பதவி நிரந்தரமாக்குதலும் இளைப்பாறுதலும்

**பதவி நிரந்தரமாக்குதல்**

பின்வரும் பெயருடைய உத்தியோகத்தர் 2012, மே மாதம் 30 ஆந் திகதியிலிருந்து மேஜர் பதவியில் நிரந்தரமாக்குதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது :-

தற்காலிக மேஜர் வஸ்து கன்கானம்கே ஜினேன்திரத்ன குமார, இசைப (உ/63909)

**இளைப்பாறுதல்**

பின்வரும் பெயருடைய உத்தியோகத்தர் 2012, மே மாதம் 31 ஆந் திகதியிலிருந்து இலங்கைத் தரைப்படையின் நிரந்தரப் படையிலிருந்து இளைப்பாறுதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது :-

மேஜர் வஸ்து கன்கானம்கே ஜினேன்திரத்ன குமார, இசைப (உ/63909)

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பும் நகர அபிவிருத்தியும் அமைச்சு.

பாதுகாப்பும் நகர அபிவிருத்தியும் அமைச்சு,
கொழும்பு,
2012, மாச்சு 16.

8-428

2012 இன் இல. 585

எம்ஓடி/டீஈஎப்/02/01/ஏஆர்எப்/ஆர்ஈ/144.

### இலங்கை தரைப்படை - நிரந்தரப்படை

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட பதவி நிரந்தரமாக்குதலும் இளைப்பாறுதலும்

**பதவி நிரந்தரமாக்குதல்**

பின்வரும் பெயருடைய உத்தியோகத்தர் 2012, யூலை மாதம் 30 ஆந் திகதியிலிருந்து மேஜர் பதவியில் நிரந்தரமாக்குதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது :-

தற்காலிக மேஜர் சங்கிரன்கே துஷித புபுது சந்தநாயக்க, இபொ (உ/64929)

**இளைப்பாறுதல்**

பின்வரும் பெயருடைய உத்தியோகத்தர் 2012, யூலை மாதம் 31 ஆந் திகதியிலிருந்து இலங்கைத் தரைப்படையின் நிரந்தரப் படையிலிருந்து இளைப்பாறுதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது :-

சங்கிரன்கே துஷித புபுது சந்தநாயக்க, இபொ (உ/64929)

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பும் நகர அபிவிருத்தியும் அமைச்சு.

பாதுகாப்பும் நகர அபிவிருத்தியும் அமைச்சு,
கொழும்பு,
2012, மே 15.

8-295

---

2012 இன் இல. 586

எம்ஓடி/டீஈஎப்/02/01/ஏஆர்எப்/ஆர்ஈ/145.

### இலங்கை தரைப்படை - நிரந்தரப்படை

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட பதவி நிரந்தரமாக்குதலும் இளைப்பாறுதலும்

**பதவி நிரந்தரமாக்குதல்**

பின்வரும் பெயருடைய உத்தியோகத்தர் 2012, யூன் மாதம் 30 ஆந் திகதியிலிருந்து மேஜர் பதவியில் நிரந்தரமாக்குதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது :-

தற்காலிக மேஜர் (உபகரணங்கள் கட்டுப்பாட்டாளர்) பண்ணல அப்புஹாமிலாகே ரத்னசிரி, இஇவைப (உ/64279)

**இளைப்பாறுதல்**

பின்வரும் பெயருடைய உத்தியோகத்தர் 2012, யூலை மாதம் 01 ஆந் திகதியிலிருந்து இலங்கைத் தரைப்படையின் நிரந்தரப் படையிலிருந்து இளைப்பாறுதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது :-

மேஜர் (உபகரணங்கள் கட்டுப்பாட்டாளர்) பண்ணல அப்புஹாமிலாகே ரத்னசிரி, இஇவைப (உ/64279)

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பும் நகர அபிவிருத்தியும் அமைச்சு.

பாதுகாப்பும் நகர அபிவிருத்தியும் அமைச்சு,
கொழும்பு,
2012, மே 15.

8-305

---

2012 இன் இல. 587

எம்ஓடி/டீஈஎப்/02/01/ஏஆர்எப்/ஆர்ஈஎஸ்/143.

### இலங்கை தரைப்படை - நிரந்தரப் படை

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரவாணையிலிருந்து இராஜினாமா செய்தல்

2012, யூன் மாதம் 01 ஆந் திகதியிலிருந்து அமுலிலிருக்கும் விதம் இலங்கை தரைப்படை நிரந்தரப் படையணியைச் சேர்ந்த பின்வரும் பெயருடைய மகளிர் உத்தியோகத்தரின் அதிகாரவாணையிலிருந்து இராஜினாமா செய்தல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது:-

லெப்டினன்ட் ஜயனி தனன்ஜா கந்தகே, பொசே (உ/67546)

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பும் நகர அபிவிருத்தியும் அமைச்சு.

பாதுகாப்பும் நகர அபிவிருத்தியும் அமைச்சு,
கொழும்பு,
2012, மே 15.

8-297

# அரசாங்க அறிவித்தல்கள்

## ஆயித்திமலை சதாசகாய அன்னை ஆலய உற்சவம் - 2012

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 1991, நவெம்பர் 1 ஆந் திகதிய இலக்கம் 687 ஐக் கொண்ட வர்த்தமானி அறிவித்தலின் யாத்திரிகை கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (175 ஆம் அத்தியாயம்) கீழ் ஆயித்தியமலை சதாசகாய அன்னை ஆலய வருடாந்த திருவிழா கொண்டாட்டம் மட்டக்களப்பு மாவட்டத்தில் மண்முனை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் (ஓகத்து) 2012.08.24 ஆந் திகதியிலிருந்து (செத்தெம்பர்) 2012.09.02 ஆந் திகதி வரை நடைபெறும் என்பதனை இத்தால் அறியத் தரப்படுகின்றது.

வீ. தவராஜா,
பிரதேச செயலாளர்,

பிரதேச செயலகம்,
மண்முனை மேற்கு,
வவுணதீவு.

8-303

---

## மட்/மண்டூர் ஸ்ரீ கந்தசுவாமி ஆலய வருடாந்த உற்சவம் - 2012

மட்/மண்டூர் ஸ்ரீ கந்தசுவாமி ஆலய வருடாந்த உற்சவம் 2012.08.11 ஆந் திகதி இரவு 8.00 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி அதனைத் தொடர்ந்து 31.08.2012 ஆந் திகதி காலை 10.00 மணிக்கு தீர்த்தோற்சவத்துடன் நடைபெற்று, அன்றைய தினம் இரவு 9.00 மணிக்கு கொடி இறக்கத்துடன் இந்நிகழ்வு நிறைவுபெறும்.

27.05.1949 ஆந் திகதிய 5886 ஆம் இலக்க அரச வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்டு வெளியிடப்பட்ட விதிகள் இக்கால வேளையில் அமுலில் இருக்கும் என்பதை பொதுமக்களின் தகவலுக்காக அறியத்தருகிறேன்.

என். வில்வரத்னம்,
பிரதேச செயலாளர்.

பிரதேச செயலகம்,
போரதீவுப்பற்று.

8- 414

---

இலக்கம் 1.

## யாத்திரைகள் கட்டளைச் சட்டம் (175 ஆம் அதிகாரம்)

ஊவா வெல்லஸ்ஸ, கொட்டபோவ குடா கதிர்காம ஆலயத்தின் வருடாந்த எசல உற்சவம் - 2012

ஊவ வெல்லஸ்ஸ, கொட்டபோவ குடா கதிர்காம ஆலயத்தின் 2012 ஆம் ஆண்டுக்கான எசல உற்சவம் 2012, ஓகத்து 17 ஆந் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 2012, செத்தெம்பர் 01 ஆந் திகதி அதிகாலை நீர்வெட்டும் வைபவத்துடன் நிறைவு பெறும் என்பதை இத்தால் பொது மக்களுக்கு அறிவிக்கிறேன்.

02. புண்ணிய ஸ்தல யாத்திரைகள் கட்டளைச் சட்டத்தின் படி 1964, யூலை 24 ஆந் திகதிய 14117 ஆம் இலக்க இலங்கை அரச வர்த்த மானியில் பிரசுரிக்கப்பட்ட நிபந்தனைகள் இவ்வுற்சவ காலங்களில் அமுலில் இருக்கும் என்பதை மக்களின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

ஏ. பத்திநாதன்,
மொணறாகலை மாவட்ட செயலாளர்,
ஊவ வெல்லஸ்ஸ, கொட்டபோவ குடா
கதிர்காம ஆலயத்தின் எசல உற்சவ
முகாம் பொறுப்பாளர்.

மாவட்ட செயலாளர் அலுவலகம்,
மொணறாகலை,
2012, யூலை 23.

8-314/1

---

இலக்கம் 02.

## ஊவா வெல்லஸ்ஸ, கொட்டபோ குடா கதிர்காம ஆலயத்தின் வருடாந்த எசல உற்சவம் - 2012

1964, யூலை 24 ஆந் திகதிய 147117 ஆம் இலக்கத்தைக் கொண்ட இலங்கை அரச வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட புண்ணியஸ்தல யாத்திரை பற்றிய நிபந்தனைகளை மக்களின் கவனத்திற்கு இத்தால் அறியத்தருவதோடு அந்த நிபந்தனைகளையும் அவைகள் தொடர்பான கீழ்க்காணும் அறிவித்தலையும் தருகிறேன்:-

1. **முகாம் பிரதேசம்.**-கொட்டபோவே ''தஹமல் ஒய'' எனும் பெயரைக் கொண்ட முன்னைய இறங்கு துறையிலிருந்து குறுக்களவாக அரை மைலுக்குட்பட்ட பிரதேசம்.

2. **கட்டிடங்கள் அமைத்தல்.**-எனது அல்லது எனது அதிகாரத்தை பெற்ற அதிகாரியின் கடித மூலமான அனுமதியின்றி எவரும் 2012, ஓகத்து 17 திகதியிலிருந்து 2012, செத்தெம்பர் 01 ஆந் திகதி வரையிலான காலப்பகுதியில் இம் முகாம் பகுதியில் எவ்வித நிரந்தர அல்லது தற்காலிக கட்டிடங்களை அல்லது கடைகளை அமைக்கக் கூடாது.

3. **பிச்சைக்காரர்கள்.**-புனித பிரதேசத்திலோ அல்லது முகாம் பகுதிகளிலோ மற்ற எந்த இடத்திலோ பிச்சை கேட்பது, வாங்குவது, அதேபோல் பிச்சை கொடுப்பது, பகிர்வது தடை செய்யப்பட்டுள்ளது.

4. **குளித்தல், கழுவுதல்.**-கொட்டபோவே ''தஹமல் ஒய'' எனும் பெயரைக் கொண்ட முன்னைய இறங்கு துறையிலிருந்து குறுக்களவாக அரை மைலுக்குட்பட்ட பிரதேசத்தில் எவரும் குளிப்பதும் துணிகளை கழுவுவதும் மிருகங்களை குளிப்பாட்டுவதும் அல்லது வாகனங்களை கழுவுவதும் தடை செய்யப்பட்டுள்ளது.

5. **வாகனங்கள்**:

5.1 என்னிடம் அல்லது எனது அதிகாரத்தை பெற்ற ஒரு அதிகாரியிடம் அனுமதிபெறாத பைசிக்களோ, மாட்டு வண்டியோ அல்லது எவ்வகையிலான வாகனமோ புனித பிரதேசத்துக்குள் செலுத்துவதோ, உட்பிரவேசிப்பதோ கூடாது.

5.2 முகாமுக்கு சொந்தமான கடைப்பகுதியில் வாகனத்தை நிறுத்துவதற்கு ஒதுக்கப்பட்டுள்ள வாகன தரிப்பிடங்களை தவிர வேறு இடங்களில் வாகனங்களை நிறுத்தக்கூடாது.

6. **காவடிக் கடைகள்**.–என்னிடம் அல்லது எனது அதிகாரத்தைப் பெற்ற ஒரு அதிகாரியிடம் பெற்ற அனுமதிப் பத்திரத்தைப் பெறாத எவரும் காவடி கடை நிறுவக்கூடாது.

7. **வியாபாரம்** :

7.1 என்னிடம் அல்லது எனது அதிகாரத்தை பெற்ற ஒரு அதிகாரியிடம் பெற்ற எழுத்து மூல அனுமதியின்றி முகாம் திடலில் கடைகளை குத்தகைக்கு கொடுப்பதும் ஏலம் விடுவதும் கூடாது. அல்லது என்னிடம் அல்லது எனது அதிகாரத்தை பெற்ற ஒரு அதிகாரியிடம் இப்பிரதேசத்தில் குறிப்பிடாத இடத்திலும் அவ்வாறான காரியத்தில் எவரும் ஈடுபடக்கூடாது.

7.2. புனித பிரதேசத்திலுள்ள பாதசாரிகளின் பாலங்களை அல்லது முகாம் பகுதியிலுள்ள ஆற்றங்கரைகளை முறைகேடான விதத்தில் ஆக்கிரமிப்பதுபோல் கூடாரங்கள் அல்லது கட்டிடங்கள் அமைப்பது அல்லது அவைகளை விஸ்தரிப்பது கூடாது.

7.3 என்னிடம் அல்லது எனது அதிகாரத்தை பெற்ற ஒரு அதிகாரியிடம் பெற்ற அனுமதியின் கீழ் பெற்றுக்கொண்ட இடத்தை விட்டு வேறு இடத்தில் திருநீறு, ஐஸ்கிறீம், பூசை பொருட்கள், பூசை தட்டுகள், உணவு வகைகள் மற்றும் ஏனையவைகள் விற்கக்கூடாது.

7.4 ஏதேனும் ஒரு வியாபாரத்தை நடாத்தும் அனைத்து கட்டிடத்திலும் அல்லது கட்டுமான பணிகளில் ஈடுபட்டிருக்கும் இடத்திலும் 4 1/2 க்கும் குறையாத கன அடியைக்கொண்ட குப்பை வாளியை வைத்திருத்தல் வேண்டும். அதில் குப்பைகளை இடும் போதும் வெளியேற்றப்படும் நேரத்தை தவிர மற்றைய நேரங்களில் அதை மூடி வைத்தல் வேண்டும். அத்துடன் குப்பையை அகற்றுவதற்கான தொழிலாளர்கள் வரும் வேளையில் அவைகளை வெளியில் வைக்க வேண்டும்.

7.5 விற்பனை செய்வதற்காக தயாரிக்கப்படும் அனைத்து உணவு களையும் பானங்களையும் ஈக்களிடமிருந்து பாதுகாத்துக்கொள்ளும் விதத்தில் மூடிகள் கொண்ட பெட்டிகளில் இடப்பட்டிருத்தல் வேண்டும்.

8. **ஆரோக்கிய சூழ்நிலையும் மக்கள் சுகாதாரமும்**:

இவைகளை கருத்திற்கொண்டு ஒதுக்கப்பட்ட இடத்தை தவிர முகாமைச் சூழவுள்ள பிரதேசத்தில் எவரும் சிறுநீர், மலம் கழிப்பது கூடாது. அத்துடன் குறிப்பிட்ட இடத்தில் அல்லது தொட்டிகளைத் தவிர முகாமை அண்டிய பிரதேசத்தில் திண்மமான அல்லது திரவமான குப்பைகளை இடக்கூடாது.

நான் வழங்கும் இக்கட்டளைகளை எவரும் மீறக்கூடாது..

ஏ. பத்திநாதன்,
மொணறாகலை மாவட்டச் செயலாளர்,
ஊவ வெல்லஸ்ஸ, கொட்டபோவ குடா
கதிர்காம ஆலயத்தின் எசல உற்சவ
முகாம் பொறுப்பாளர்.

மாவட்டச் செயலாளர் அலுவலகம்,
மொணறாகலை,
2012, யூலை 23.

8-314/2

---

## 2012 சிறு போகம் - கந்தளல திட்டத்தின் கூட்டறிக்கை

வெலிமடை பிரதேச செயலக பிரிவின் கந்தளல திட்டத்தின் 2012 சிறுபோகத்திற்கான கூட்டம் 2012.05.22 ஆந் தினத்தன்று கெப்படிஹெல நீர்ப் பாசன அலுவலகத்தில் நடைபெற்றது. அதன்போது பின்வரும் தீர்மானங்கள் பெறப்பட்டன.

| | | | |
|---|---|---|---|
| 1. | பயிரிடப்படும் நிலப்பரப்பு | - | 2300 ஏக்கர் |
| 2. | பயிரிடப்படும் பயிர் | - | கிழங்கு, கலப்புப் பயிர் |
| 3. | முதல் முறை நீர் விநியோகித்தல் | - | 2012.06.20 |
| 4 | பிரதான கால்வாய் துணை கால்வாய்கள் சுத்தம் செய்தல் | - | 2012.05.25 முதல் 2012.06.05 வரை |
| 5. | உழுதல் நிலத்தை தயார் செய்தல் | - | 2012.06.30 க்கு முன்பு |
| 6. | கன்று நட்டு முடித்தல் | - | 2012.07.15 க்கு முன்பு |
| 7. | இறுதி முறை நீர் விநியோகித்தல் | - | 2012.10.15 க்கு முன்பு |
| 8. | அறுவடை செய்து முடித்தல் | - | 2012.11.01 |
| 9. | தேவைக்கேற்ப நீர் கட்டுப்பாட்டு முறையொன்றை அமுல்படுத்தல் | | |
| 10. | கால் வாய் சுத்தம் செய்யாதோருக்கு தண்டப்பணம் | - | ஒரு நாள் சம்பளம் |
| 11. | இரண்டாம் முறை கால்வாய் சுத்தம் செய்தல் | - | 2012, ஓகத்து மாதம் இரண்டாம் வாரம் |
| 12. | அனுமதியின்றி நீர் பெறுவதை குறைப்பதற்காக குறிப்பிட்ட நேரத்துக்கு மாத்திரம் நீரை பெற்றுக் கொள்ளுமாறும் அதனை மீறுபவர்களுக்கெதிராக 25,000 ரூபா தண்டப் பணம் அல்லது 14 நாட்களுக்கு கைது செய்வதற்கு முடியுமானளவு சட்டம் ஏற்பாடும் செய்தல். | | |

13. நீர் குறைபாடு சிறுபோகத்திற்கு தாக்கம் செலுத்துவதால் போகத்தின் போது சட்டவிரோத விவசாயிகளுக்கு 2013 முதல் பெரும் போகத்தின் போது மாத்திரம் பயிரிடுவதற்கு ஏற்பாடு செய்தல்.

ஈ. எம். எஸ். பி.ஜயசுந்தர,
பிரதேச செயலகம்,
வெலிமடை.

வெலிமடை பிரதேச செயலகம்.
2012.07.25.

8-431

---

# அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள்

## கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீ. எல். சீ.

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீ. எல். சீ. (பதிவு இலக்கம் (PQ 116) பணிப்பாளர் சபையால் அங்கீகரிக்கப்பட்ட தீர்மானம்

கடன் கணக்கு இலக்கம் 843086 – அமரசிங்க ஆரச்சிகே தோன லூசி மேரி ஜசிந்தா மாலனி ரன்தெனிய ரன்தெனிய ஆரச்சிகே தொன் சமில் தாரக ரன்தெனிய

27.04.2012 ஆந் திகதி நடைபெற்ற பணிப்பாளர சபை கூட்டமொன்றில் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் விசேடமாகவும் ஏகமனதாகவும் நிறைவேற்றிய தீர்மானிமாவது :-

"கொழும்பு பிரசித்த நொத்தாரிசு ஆர். ஏ. டி. ரனகல என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 15.02.2005 ஆந் திகதிய 98 ஆம் இலக்கம் மற்றும் கொழும்பு பிரசித்த நொத்தாரிசு ஜே. ஆர். கமகே என்பவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 15.08.2006 ஆந் திகதிய 3281 ஆம் இலக்க முறிகளின் மீது வரையறுக்கப்பட்ட கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் தற்போது கொமர்ஷல் பேங்க் பீஎல்சீ இற்கு அமரசிங்க ஆரச்சிகே தோன லூசி மேரி ஜசிந்தா மாலனி ரன்தெனிய மற்றும் ரன்தெனி ஆரச்சிகே தொன் சமில் தாரக ரன்தெனிய அல்லது ரன்தெனிய ஆரச்சிகே தொன் சமில் தாரக ரன்தெனிய ஆகியோர் கடப்பாடுடையவர்களாகவும் ரன்தெனி அல்லது ரன்தெனிய ஆரச்சிகே தொன் சமில் தாரக ரன்தெனிய ஆரச்சிகே தொன் சமில் தாரக ரன்தெனிய என்பவர் ஈட்டாளராகவும் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீ இற்கு வருமதியான கொடுப்பனவை செலுத்த தவறியுள்ளார்கள். ஆதலால் இப்பொழுது மேற்படி முறிகளின் மீது ஐம்பத்தைந்து இலட்சத்து முப்பத்து நான்காயிரத்து அறுநூற்று அறுபத்தைந்து ரூபா இருபத்தொரு சதம் (ரூ. 55,34,665.21) பணத்தொகை 21.03.2012 ஆந் திகதியன்று உள்ளவாறு கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீக்கு வருமதியாகவும் சேரவேண்டியும் உள்ளதாலும் மேற்படி ஐம்பத்தைந்து இலட்சத்து முப்பத்து நான்காயிரத்து அறுநூற்று அறுபத்தைந்து ரூபா இருபத்தொரு சதம் (ரூ. 55,34,665.21) பணத்தொகையும் அத்துடன் 22.03.2012 ஆந் திகதியிலிருந்து விற்பனை நாள் வரை காலத்துக்கான ரூ. 50,05,000 பணத்தொகைக்கு 15% வருடாந்த வட்டியும் விளம்பரச் செலவுகளையும் கூறப்பட்ட வேறு அறவீடுகளையும் அதன்பின்னர் கொடுப்பனவுகள் எவையும் பெறப்பட்டிருப்பின் அவற்றை கழித்து அறவிடுவதற்காக இதற்கான அட்டவணையில் நன்கு விபரிக்கப்படுபவையும் 98 மற்றும் 3281 ஆம் இலக்க முறிகளினால் மேற்படி கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீக்கு ஈடுவைக்கப்பட்டவையுமான ஆதனமும் வளவுகளும் கண்டி, மாவில்மட லேவெல்ல பாதை, துட்டுகெமுனு மாவத்தை, இல. 369/1 ஐச் சேர்ந்த உத்தரவுபெற்ற ஏலதாரர் ஐ. டபிள்யூ. ஜயசூரிய என்பவரினால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டுமென கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீ பணிப்பாளர் சபை 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் அதற்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் இத்தால் தீர்மானிக்கின்றது."

### அட்டவணை

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், அலுத்குரு கோறளை ராகம்பத்துவ ஜாஎல பிரதேச சபை எல்லைகளுக்குட்பட்ட கந்தான கிராமத்தில் அமைந்துள்ள கோன்கஹவத்த சியம்பலகஹவத்த மற்றும் கெட்டகெலகஹவத்த எனும் காணி உரிமம் பெற்ற நிலஅளவையாளர் கே. ஈ. ஜே. பி. பெரேரா என்பவரினால் தயாரிக்கப்பட்ட 22.12.1984 ஆந் திகதிய 126 ஆம் இலகக் வரைபடத்தில் குறிக்கப்பட்ட பிரித்தெடுக்கப்பட்ட லொட் 4 எனும் காணித்துண்டின் எல்லைகள் - வடக்கு : லொட் 1 மற்றும் லொட் 3 (8 அடி பாதைக்காக ஒதுக்கப்பட்டது) ; கிழக்கு : சாந்த தெரேசா மாவத்தை ; தெற்கு மற்றும் மேற்கு : எல். ஏ. சில்வா என்பவருக்குச் சொந்தமான காணியும் இவ் வெல்லைக்குள் அமைந்துள்ள கட்டிடங்கள், மரங்கள், பயிர்களுடன் முப்பத்தைந்து தசம் ஒன்பது எட்டு பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 35.98பே.) பரப்பளவான காணியும் அதனுள்ளடங்கும் மற்றும் சகலதுமாகும். இது கம்பஹா காணிப் பதிவகத்தில் B 206/181 இன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

மேற்கூறிய காணி அண்மையில் தயாரிக்கப்பட்ட வரைபட இல. 3416 இன் அளவையின்படி கீழ்கண்டவாறு விபரிக்கப்பட்டுள்ளது:-

மேற்கூறிய கந்தான கிராமத்தில் அமைந்துள்ள கோன்கஹவத்த சியம்பலகஹவத்த மற்றும் கெட்டகெலகஹவத்த எனும் காணி உரிமம் பெற்ற நிலஅளவையாளர் எம். டி. என். ரி. பெரேரா என்பவரினால் தயாரிக்கப்பட்ட 05.11.2004 ஆந் திகதிய 3416 ஆம் இலகக் வரைபடத்தில் குறிக்கப்பட்ட பிரித்தெடுக்கப்பட்ட லொட் 4 எனும் காணித்துண்டும் அதனுள்ளடங்கும் கந்தான சாந்த தெரேசா மாவத்தையில் வரிப்பண இல. 68/6 எனும் சொத்தின் எல்லைகள் - வடக்கு : அதே காணியின் லொட் 1 மற்றும் லொட் 3 ; கிழக்கு : சாந்த தெரேசா மாவத்தை ; தெற்கு மற்றும் மேற்கு : எல். ஏ. சில்வா என்பவருக்குச் சொந்தமான காணியும் இவ் வெல்லைக்குள் அமைந்துள்ள வரைபட இல. 3416 இல் குறிக்கப்பட்டவாறு முப்பத்தைந்து பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 35பே.) பரப்பளவான காணி.

(திருமதி) ஆர். ஆர். துனுவில,
கம்பனிச் செயலாளர்.

4-330

**மக்கள் வங்கி**

*1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி என்னும் பிரிவின் கீழான தீர்மானம்*

*1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி என்னும் பிரிவின்கீழான தீர்மானம் மக்கள் வங்கிப் பணிப்பாளர் சபையால் 2001.01.25 ஆந் திகதி நடைபெற்ற அவர்களது கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது:-*

*''அலிவ் இன்டர்நெஷனல் டிரேட்'' இல. 188 1/3, 2 ஆம் குறுக்குத் தெரு, கொழும்பு 11 என்னும் முகவரியைச் சேர்ந்த மொஹமட் ஜலால்தீன் மொஹமட் ஹஸார் மற்றும் மொஹமட் ஜலால்தீன் அஸாம் காதர் இருவரும் மக்கள் வங்கியின் சார்பில் கொழும்பைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு பெற்றீசியா குணரத்ன அத்தாட்சிப்படுத்திய 1998, யூலை 3 ஆந் திகதி கொண்ட 437 ஆம் இலக்க ஈட்டு முறியின்மீது வருமதியான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளனர். ஆதலால் இப்பொழுது மேற்படி முறியின் மீது ஒன்பது இலட்சத்து ஏழாயிரத்து அறுநூற்று எட்டு ரூபா ஐம்பது சதம் (ரூ. 9,07,608.50) மக்கள் வங்கிக்கு வருதியாகவும் சேரவேண்டியுமுள்ளது. ஆதலால் ஒன்பது இலட்சத்து ஏழாயிரத்து அறுநூற்று எட்டு ரூபா ஐம்பது சதத்தையும் (ரூ. 9,07,608.50), நான்கு இலட்சத்து ஏழாயிரத்து அறுநூற்று எட்டு ரூபா ஐம்பது சதம் (ரூ. 4,07,608.50) 08.07.1999 முதல் விற்பனைத் திகதி வரை ஆண்டொன்றுக்கு 25 சதவீதப்படி வட்டியையும் ஐந்து இலட்சம் ரூபா மீது (ரூபா 5,00,000) 01.02.2000 முதல் விற்பனைத் திகதி வரை ஆண்டொன்றுக்கு 27 சதவீதப்படி வட்டியையும் விற்பனைச் செலவுகளையும் அதன் பின்னர் கொடுப்பனவுகள் எவையும் பெறப்பட்டிருப்பின் அவற்றைக் கழித்து அறவிடுவதற்காக மேற்படி 437 ஆம் இலக்க ஈட்டு முறியினால் மேற்படி வங்கிக்கு ஈடுவைக்கப்பட்ட ஆதனமும் வளவுகளும் கொழும்பைச் சேர்ந்த உத்தரவுபெற்ற ஏலதாரர் திருமதி ஈ. எஸ். ராமநாயக்க என்பவரால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டுமென மக்கள் வங்கிப் பணிப்பாளர் சபை 1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தால் அதற்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் இத்தால் தீர்மானிக்கின்றது.''*

**அட்டவணை**

*மத்திய மாகாணம், கண்டி மாவட்டம், ஹரிஸ்பத்துவ பள்ளேகம்பஹா கோறளை அக்குறணை பிரதேச சபை எல்லைகளுக்குட்பட்ட அங்கும்புற கிராமத்தில் அமைந்துள்ள ''பன்சல்தென்ன எஸ்டேட்டின்'' ஒரு பகுதி என அழைக்கப்படுவதுமான காணியில் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் கே. எஸ். சமரசிங்க தயாரித்த 1990, ஒற்றோபர் 11 ஆந் திகதி கொண்ட 3793 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 19 என அடையாளமிடப்பட்டு பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும். அதன்கண் அமைந்துள்ள மண், மரங்கள், பயிர்ச்செய்கைகள், கட்டிடங்கள் மற்றும் அனைத்தும் சேர்த்து. மேற்படி துண்டு 19 என்பதற்கு எல்லைகளாக - வடக்கில் : துண்டு 20 ; கிழக்கில் : துண்டு 29 ; தெற்கில் : துண்டு 18 ; மேற்கில் : அங்கும்புற அளவத்துகொட பெருந்தெரு என்பன அமைந்துள்ளன. இதன் பரப்பளவு ஒரு றூட் (0ஏ. 1றூ. 0பே.) இது கண்டி காணிப்பதிவகத்தில் H 561/222 என்பதன் கீழ் பதிவு செய்யப் பட்டுள்ளது.*

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

பிரதேச முகாமையாளர்,
கொழும்பு வடக்கு.

மக்கள் வங்கி,
வலயத் தலைமை அலுவலகம்,
(மேற்கு வலயம் 01),
இல. 11, டியூக் வீதி,
கொழும்பு 01.

*8-346*

---

**மக்கள் வங்கி - சிலாபம் கிளை**

*1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க (திருத்தச்) சட்டப்படி 1961ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி பிரிவின் கீழ் பிரேரணை*

*1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க (திருத்தச்) சட்டப்படி 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி பிரிவின் கீழ் மக்கள் வங்கியின் பணிப்பாளர் சபையினால் 2010.09.30 ஆந் திகதீ கீழே தரப்பட்டிருக்கும் பிரேரணை ஏகமனதாக நிறைவேற்றப்பட்டதாக இத்தால் அறிவிக்கப்படுகிறது:-*

*''மாறாவிலை பிரசித்த நொத்தாரிசு திருமதி ருவிணி ஏ. எஸ். தஸநாயக்க என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2009.07.29 ஆந் திகதியும் 7592 ஆம் இலக்கத்தையுமுடைய அடைவுச்சீட்டின் பிரகாரம் கொடுப்பனவு, கொஸ்தான் கிறிஸ்பின் ஜுட் ரோய் பிரணாந்து என்பவரால் கடப்பாடுடையவராகக் கட்டணத்தைச் செலுத்தத் தவறியதால், இப்பொழுது அவ்வடைவுச்சீட்டின் கீழ் ஏழு இலட்சத்து முப்பத்துமூவாயிரத்து எண்ணூற்று எழுபத்தேழு ரூபா நான்கு சதம் (ரூ. 7,33,877.04), மக்கள் வங்கிக்கு அறவிடப்பட வேண்டியுள்ளதால், மேலும் ஏழு இலட்சத்து முப்பத்துமூவாயிரத்து எண்ணூற்று எழுபத்தேழு ரூபா நான்கு சதம் (ரூ. 7,33,877.04), 2009.12.31 ஆந் திகதி முதல் வருடத்துக்கு 27 வீதம், ஏலவிற்பனை தினம் வரை மேலும் வட்டியுடனும், சக தொடர்புடைய 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29 எல் (29L) சரத்தின்படி அறவிடப்பட வேண்டிய பணம் சக கட்டணம் உட்பட ஏதாவது கடட்ணம் கிடைத்திருப்பின், அவைகள் குறைக்கப்பட்டு, குறிப்பிட்ட ஏழு இலட்சத்து முப்பத்துமூவாயிரத்து எண்ணூற்று எழுபத்தேழு ரூபா நான்கு சதம் (ரூ. 7,33,877.04), மீட்டெடுப்பதற்காக அதிகாரம் பெற்ற ஏலவிற்பனையாளர் சொக்மன் மற்றும் சமரவிக்ரம கம்பனி என்பவர்களால் 7592 ஆம் இலக்க அடைவுச்சீட்டின் பிரகாரம் இவ்வங்கிக்கு ஈடுவைக்கப்பட்டுள்ள சொத்தையும் வீட்டையும் பொது ஏலத்தில் விற்கப்பட வேண்டும் என 1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க (திருததச்) சட்டப்படி 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29 ஆம் பிரிவின் பிரகாரம் வழங்கியுள்ள அதிகாரத்திற் கிணங்க மக்கள் வங்கியின் பணிப்பாளர் சபை இத்தால் தீர்மானிக்கின்றது.''*

**ஈடுவைக்கப்பட்ட ஆதனங்களின் விவரணம்**

வடமேல் மாகாணத்தில், புத்தளம் மாவட்டத்தில், சிலாபம் காணிப் பதிவுப் பிரிவிற்குரிய, வட பிட்டிகல் கோரளையில், ஆணவிழுந்தான் பத்துவில் கோட்டபிட்டிய எனும் கிராமத்தில் அமைந்துள்ள ''கோட்டபிட்டிய கெலே'' எனும் காணிக்கு, திரு. ஏ. ஜி. எஸ். பராக்கிரம, அதிகாரம் பெற்ற நிலஅளவையாளரினால் 1997.07.05 ஆந் திகதி அளந்து தயாரிக்கப்பட்ட 1495 ஆம் இலக்க வரைபடத்திற்கிணங்க 06 ஆம் இலக்கத் தொகுதிக்கு: எல்லைகள் - வடக்கில் : மேற்சொன்ன வரைபடத்தில் 05 ஆம் இலக்கத் தொகுதி ; கிழக்கில் : எச். ஜி. பீரிஸ் அப்புஹாமி உரிமை கோரும் வயல் காணி ; தெற்கில் : மேற்சொன்ன வரைபடத்தில் 09 ஆம் இலக்கத் தொகுதி ; மேற்கில் : மேற்சொன்ன வரைபடத்தில் 08 ஆம் இலக்கத் தொகுதியாகிய பாதைக்காக ஒதுக்கப் பட்ட காணியும் 07 ஆம் இலக்கத் தொகுதியும் ஆகிய எல்லைகளினால் சூழ்ந்த பிரமாணத்தில் ஒரு றூட் நான்கு பேர்ச்சஸ்கள் (0ஏ. 1றூ. 4பே.) விஸ்தீரணமுள்ள காணியும், மற்றும் இக்காணியில் இருக்கும் மரமட்டை, பழவகை, கட்டிடங்கள் ஆகிய அனைத்தும் அடங்கும்.

இக்காணி சிலாபம் காணிப்பதிவு அலுவலகத்தில் D 154/184 ஆம் இலக்கத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

மேற்சொன்ன காணியை கீழ்க் காட்டப்பட்டுள்ளபடி மீண்டும் அளந்து தயாரிக்கப்பட்டுள்ளது:-

மேற்சொன்ன கோட்டபிட்டிய எனும் கிராமத்தில் அமைந்துள்ள ''கோட்டபிட்டிய கெலே'' எனும் காணிக்கு, திரு. எஸ். ஸ்ரீதரன் அதிகாரம் பெற்ற நிலஅளவையாளரினால் 1999.06.04 ஆந் திகதி அளந்து தயாரிக்கப்பட்ட 4156 ஆம் இலக்க வரைபடத்திற்கிணங்க 01 ஆம் இலக்கத் தொகுதிக்கு எல்லைகள் - வடக்கில் : ஏ. ஜி. எஸ். பி. பராக்கிரம அதிகாரம் பெற்ற நிலஅளவையாளரின் 1495 ஏ வரைபடத்தில் 05 ஆம் இலக்கத் தொகுதி; கிழக்கில் : ஏ. ஜி. எஸ். பி. பராக்கிரம அதிகாரம் பெற்ற நிலஅளவையாளரின் 1495 ஏ வரைபடத்தில் 05 ஆம் இலக்கத் தொகுதி மற்றும் ஏ. ஜீ. பீரிஸ் அப்புஹாமி உரிமைகோரும் வயல் காணி ; தெற்கில் : ஏ. ஜி. எஸ். பி. பராக்கிரம அதிகாரம் பெற்ற நிலஅளவையாளரின் 1495 ஏ வரைபடத்தில் 09 ஆம் இலக்கத் தொகுதி; மேற்கில் : மேற்சொன்ன வரைபடத்தில் 10 அடி அகலப் பாதைக்காக ஒதுக்கப்பட்ட 07 ஆம் இலக்கத் தொகுதியும் 08 ஆம் இலக்கத் தொகுதியும். ஆகிய எல்லைகளினால் சூழ்ந்த பிரமாணத்தில் ஒரு றூட் நான்கு பேர்ச்சஸ்கள் (0ஏ. 1றூ. 4பே.) அல்லது ஹெக்டயார் பூஜ்யம் தசம் ஒன்று ஒன்று ஒன்று இரண்டு ஒன்பது (ஹெக். 0.1129) விஸ்தீரணமுள்ள காணியும், மற்றும் இக்காணியில் இருக்கும் மரமட்டை, பழவகை, கட்டிடங்கள் ஆகிய அனைத்தும் அடங்கும்.

மேற்சொன்ன காணிக்கு உட்செலுத்துவதற்காக இருக்கும் ஏ. ஜி. எஸ் பி. பராக்கிரம அதிகாரம் பெற்ற நிலஅளவையாளரின் 1495 ஆம்இலக்க வரைபடத்தில் 08 ஆம் இலக்கத் தொகுதியாகிய 10 அடி அகலப் பாதையை பொதுவாக பாதையாகப் பாவிப்பதற்கு பாதையுரிமையும் இத்துடனாகும்.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

பிரதேச முகாமையாளர்,
புத்தளம்.

மக்கள் வங்கி,
பிரதேச தலைமை அலுவலகம் (சிலாபம்),
இல. 79, மாறவில பாதை,
நாத்தாண்டிய.

8-347

---

**மக்கள் வங்கி - சிலாபம் கிளை**

*1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க (திருத்தச்) சட்டப்படி 1961ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி பிரிவின் கீழ் பிரேரணை*

1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க (திருத்தச்) சட்டப்படி 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி பிரிவின் கீழ் மக்கள் வங்கியின் பணிப்பாளர் சபையினால் 2010.05.25 ஆந் திகதி கீழே தரப்பட்டிருக்கும் பிரேரணை ஏகமனதாக நிறைவேற்றப்பட்டதாக இத்தால் அறிவிக்கப்படுகிறது:-

''மாறாவிலை பிரசித்த நொத்தாரிசு திருமதி ருவினி ஏ. எஸ். தஸநாயக்க என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2006.07.06 ஆந் திகதியும் 4360 ஆம் இலக்கத்தையுமுடைய அடைவுச்சீட்டின் பிரகாரம் கொடுப்பனவு, தொன் ரெஹான் லசன்த வீரசிங்ஹ மற்றும் பர்கர் கொல்லகே லிலியன் ரோஸ் தபரேரா என்பவர் கடப்பாடுடையவர்களாகக் கட்டணத்தைச் செலுத்தத் தவறியதால், இப்பொழுது அவ்வடைவுச்சீட்டின் கீழ் நான்கு இலட்சத்து எழுபத்தையாயிரத்து நாநூற்று முப்பத்தொன்பது ரூபா எழுபத்தெட்டு சதம் (ரூ. 4,75,439.78), மக்கள் வங்கிக்கு அறவிடப்பட வேண்டியுள்ளதால், மேலும் நான்கு இலட்சத்து எழுபத்தையாயிரத்து நாநூற்று முப்பத்தொன்பது ரூபா எழுபத்தெட்டு சதம் (ரூ. 4,75,439.78), 2009.12.29 ஆந் திகதி முதல் வருடத்துக்கு 16.75% வீதம், ஏலவிற்பனை தினம் வரை மேலும் வட்டியுடனும், சக தொடர்புடைய 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29 எல் (29டி) சரத்தின்படி அறவிடப்பட வேண்டிய பணம் சக கட்டணம் உட்பட ஏதாவது கட்டணம் கிடைத்திருப்பின், அவைகள் குறைக்கப்பட்டு, குறிப்பிட்ட நான்கு இலட்சத்து எழுபத்தையாயிரத்து நாநூற்று முப்பத்தொன்பது ரூபா எழுபத்தெட்டு சதம் (ரூ. 4,75,439.78), மீட்டெடுப்பதற்காக நீர்கொழும்பு அதிகாரம் பெற்ற ஏலவிற்பனையாளர் சொக்மன் மற்றும் சமரவிக்ரம கம்பனி என்பவர்களால் 4360 ஆம் இலக்க அடைவுச்சீட்டின் பிரகாரம் இவ்வங்கிக்கு ஈடுவைக்கப்பட்டுள்ள சொத்தையும் வீட்டையும் பொது ஏலத்தில் விற்கப்பட வேண்டும் என 1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க (திருத்தச்) சட்டப்படி 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29 ஆம் பிரிவின் பிரகாரம் வழங்கியுள்ள அதிகாரத்திற்கிணங்க மக்கள் வங்கியின் பணிப்பாளர் சபை இத்தால் தீர்மானிக்கின்றது.''

**ஈடுவைக்கப்பட்ட ஆதனங்களின் விவரணம்**

வடமேல் மாகாணத்தில், புத்தளம் மாவட்டத்தில், சிலாபம் காணிப் பதிவுப் பிரிவிற்குரிய, வட பிட்டிகல் கோரளையில், ஆணவிழுந்தான் பத்துவில் நள்ளதரன்கட்டுவ எனும் கிராமத்தில் அமைந்துள்ள ''ரோமானி வத்த'' எனும் காணிக்கு, நிலஅளவையாளர் நாயகத்திற்காக பிரிவு பொறுப்புள்ள அளவை அதிகாரியினால் அளந்து 1993.11.11 ஆந் திகதி தயாரிக்கப்பட்ட மு. பீ. பு. 3332 ஆம் இலக்கத்திற்கிணங்க 09 ஆம் இலக்கத் தொகுதிக்கு எல்லைகள் - வடக்கில் : 08 ஆம் இலக்கத் தொகுதி ; கிழக்கில் : அடிப்பாதை; தெற்கில் : 26 ஆம் மற்றும் 25 ஆம் இலக்கத் தொகுதிகள் ; மேற்கில் : 10 ஆம் இலக்கத் தொகுதி. ஆகிய எல்லைகளினால் சூழ்ந்த பிரமாணத்தில் பூஜ்யம் ஏக்கர் இரண்டு றூட் ஒன்பது தசம் ஏழு நான்கு பேர்ச்சஸ்கள் (0ஏ. 2றூ. 9.74பே.) அல்லது ஹெக்டயார் பூஜ்யம் தசம் இரண்டு இரண்டு ஏழு (ஹெக். 0.227) விஸ்தீரணமுள்ள காணியும், மற்றும் இக்காணியில் இருக்கும் மரமட்டை, பழவகை, கட்டிடங்கள் ஆகிய அனைத்தும் அடங்கும்.

இக்காணி சிலாபம் காணிப்பதிவு அலுவலகத்தில் D 135/102 ஆம் இலக்கத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்சொன்ன காணிக்கு உட்பிரவேசிப்பதற்காக கிழக்குத் திசை எல்லையில் குறிப்பிடப்பட்டுள்ள பாதையின் பாதையுரிமையும் இத்துடனாகும்.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

பிரதேச முகாமையாளர்,
புத்தளம்.

மக்கள் வங்கி,
பிரதேச தலைமை அலுவலகம்,
இல. 79, மாறவில பாதை,
நாத்தாண்டிய.

8-348

---

**மக்கள் வங்கி - சிலாபம் கிளை**

1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க (திருத்தச்) சட்டப்படி
1961ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின்
29டி பிரிவின் கீழ் பிரேரணை

1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க (திருத்தச்) சட்டப்படி 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி பிரிவின் கீழ் மக்கள் வங்கியின் பணிப்பாளர் சபையினால் 2010.07.30 ஆந் திகதி கீழே தரப்பட்டிருக்கும் பிரேரணை ஏகமனதாக நிறைவேற்றப்பட்டதாக இத்தால் அறிவிக்கப்படுகிறது:-

"மாறவிலை பிரசித்த நொத்தாரிசு திருமதி ருவிணி ஏ. எஸ். தஸநாயக்க என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2005.12.08 ஆந் திகதியும் 3531 ஆம் இலக்கத்தையுமுடைய அடைவுச்சீட்டின் பிரகாரம் கொடுப்பனவு, தொன் ரோஷன் பிரமோத் நிலான்த வீரசிங்ஹ மற்றும் திருமதி மணமாலகே நிலுகா சுதர்ஸனீ சில்வா, என்பவர்களால் கடப்பாடுடையவர்களாகக் கட்டணத்தைச் செலுத்தத் தவறியதால், இப்பொழுது அவ்வடைவுச்சீட்டின் கீழ் ஆறு இலட்சத்து இருபத்தாறாயிரத்து இருநூற்று பதினொரு ரூபா எண்பத்தேழு சதம் (ரூ. 6,26,211.87), மக்கள் வங்கிக்கு அறவிடப்பட வேண்டியுள்ளதால், மேலும் ஆறு இலட்சத்து இருபத்தாறாயிரத்து இருநூற்று பதினொரு ரூபா எண்பத்தேழு சதம் (ரூ. 6,26,211.87), 2010.02.16 ஆந் திகதி முதல் வருடத்துக்கு 16.75% வீதம், ஏலவிற்பனை தினம் வரை மேலும் வட்டியுடனும், சக தொடர்புடைய 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29 எல் (29L) சரத்தின்படி அறவிடப்பட வேண்டிய பணம் சக கட்டணம் உட்பட ஏதாவது கடட்ணம் கிடைத்திருப்பின், அவைகள் குறைக்கப்பட்டு, குறிப்பிட்ட ஆறு இலட்சத்து இருபத்தாறாயிரத்து இருநூற்று பதினொரு ரூபா எண்பத்தேழு சதம் (ரூ. 6,26,211.87), மீட்டெடுப்பதற்காக அதிகாரம் பெற்ற ஏலவிற்பனையாளர் சொக்மன் மற்றும் சமரவிக்ரம கம்பனி என்பவர்களால் 3531 ஆம் இலக்க அடைவுச்சீட்டின் பிரகாரம் இவ்வங்கிக்கு ஈடுவைக் கப்பட்டுள்ள சொத்தையும் வீட்டையும் பொது ஏலத்தில் விற்கப்பட வேண்டும் என 1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க (திருத்தச்) சட்டப்படி 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29 ஆம் பிரிவின் பிரகாரம் வழங்கியுள்ள அதிகாரத்திற்கிணங்க மக்கள் வங்கியின் பணிப்பாளர் சபை இத்தால் தீர்மானிக்கின்றது."

**ஈடுவைக்கப்பட்ட ஆதனங்களின் விவரணம்**

வடமேல் மாகாணத்தில், புத்தளம் மாவட்டத்தில், சிலாபம் காணிப் பதிவுப் பிரிவிற்குரிய, வட பிட்டிகல் கோரளையில், ஆனைவிழுந்தான் பத்துவில் கிறிவெல்கெலே எனும் கிராமத்தில் அமைந்துள்ள "கிறிவெல்கெலே வத்த" எனும் காணிக்க திரு. எம். குணசேகர, அதிகாரம் பெற்ற நிலஅளவையாளரினால் 1999.08.17 ஆந் திகதி அளந்து பிரிக்கப்பட்டு 1999.08.22 ஆந் திகதி தயாரிக்கப்பட்ட 2427 ஆம் இலக்க வரைபடத்திற்கிணங்க 01 ஆம் இலக்கத் தொகுதிக்கு எல்லைகள் - வடக்கில் : இலக்கம் மு. பீ. பு. 158 ஆம் இலக்க வரைபடத்தில் 13 ஆம் இலக்கத் தொகுதி மற்றும் 12 ஆம் இலக்கத் தொகுதி, அதே வரைபடத்தில் 43 ஆம் இலக்கத் தொகுதி; கிழக்கில் : இலக்கம் 2427 ஆம் இலக்க வரைபடத்தில் 01 ஆம் இலக்கத் தொகுதி ; தெற்கில் : ஆணவிழுந்தான் முதல் நள்ளதரன்கட்டுவ வரை பேரகும் பாதை ; மேற்கில் : மு. பீ. பு. 158 ஆம் இலக்க வரைபடத்தில் 41 ஆம் இலக்கத் தொகுதியாகிய பாதை. அதே வரைபடத்தில் 34 மற்றும் அதே வரைபடத்தில் 13 ஆம் இலக்கத் தொகுதி.ஆகிய எல்லைகளினால் சூழ்ந்த பிரமாணத்தில் ஒரு ஏக்கர் ஒரு றூட் பூஜ்யம் ஒன்று தசம் ஐந்து பூஜ்யம் பேர்ச்சஸ்கள் (1ஏ. 1றூ. 01.50பே.) அல்லது ஹெக்டயார் பூஜ்யம் தசம் ஐந்து பூஜ்யம் ஒன்பது ஏழு (ஹெக். 0.5097) விஸ்தீரணமுள்ள காணியும், மற்றும் இக்காணியில் இருக்கும் மரமட்டை, பழவகை, கட்டிடங்கள் ஆகிய அனைத்தும் அடங்கும்.

இக்காணி சிலாபம் காணிப்பதிவு அலுவலகத்தில் R 53/178 ஆம் இலக்கத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

மேற்சொன்ன காணிக்கு உட்செல்வதற்காக இருக்கும் தொகுதி இலக்கம் 41 ஆகிய பாதையை பொதுவாகப் பாவிப்பதற்காக பாதையுரிமை இத்துடனாகும்.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

பிரதேச முகாமையாளர்,
புத்தளம்.

மக்கள் வங்கி,
பிரதேச தலைமை அலுவலகம்,
இல. 79, மாறவில வீதி,
நாத்தாண்டி.

8-349

---

**மக்கள் வங்கி - சிலாபம் கிளை**

1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க (திருத்தச்) சட்டப்படி
1961ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின்
29டி பிரிவின் கீழ் பிரேரணை

1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க (திருத்தச்) சட்டப்படி 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி பிரிவின் கீழ் மக்கள் வங்கியின் பணிப்பாளர் சபையினால் 2010.07.30 ஆந் திகதி கீழே தரப்பட்டிருக்கும் பிரேரணை ஏகமனதாக நிறைவேற்றப் பட்டதாக இத்தால் அறிவிக்கப்படுகிறது:-

"மாறாவிலை பிரசித்த நொத்தாரிசு திருமதி ருவிணி ஏ. எஸ். தஸநாயக்க என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2006.11.16 ஆந்

திகதியும் 4951 ஆம் இலக்கத்தையுமுடைய அடைவுச்சீட்டின் பிரகாரம் கொடுப்பனவு, மணமாலகே உதேஸ் சம்பிக சில்வா, தொன் டியுலின் கொன்ஸி வீரசிங்ஹ மற்றும் மணமாலகே டென்ஸில் பெடினக் சில்வா என்பவர்களால் கடப்பாடுடையவர்களாகக் கட்டணத்தைச் செலுத்தத் தவறியதால், இப்பொழுது அவ்வடைவுச்சீட்டின் கீழ் நான்கு இலட்சத்து எண்பத்துமூவாயிரத்து முந்நூற்று எழுபத்தெட்டு ரூபா மூன்று சதம் (ரூ. 4,83,378.03), மக்கள் வங்கிக்கு அறவிடப்பட வேண்டியுள்ளதால், மேலும் நான்கு இலட்சத்து எண்பத்துமூவாயிரத்து முந்நூற்று எழுபத்தெட்டு ரூபா மூன்று சதத்துக்கும் (ரூ. 4,83,378.03), 2010.01.24 ஆந் திகதி முதல் வருடத்துக்கு 18.5% வீதம், ஏலவிற்பனை தினம் வரை மேலும் வட்டியுடனும், சக தொடர்புடைய 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29 எல் (29L) சரத்தின்படி அறவிடப்பட வேண்டிய பணம் சக கட்டணம் உட்பட ஏதாவது கடட்ணம் கிடைத்திருப்பின், அவைகள் குறைக்கப்பட்டு, குறிப்பிட்ட நான்கு இலட்சத்து எண்பத்துமூவாயிரத்து முந்நூற்று எழுபத்தெட்டு ரூபா மூன்று சதத்தையும் (ரூ. 4,83,378.03),, மீட்டெடுப்பதற்காக நீர்கொழும்பு அதிகாரம் பெற்ற ஏலவிற்பனையாளர் சொக்மன் மற்றும் சமரவிக்ரம கம்பனி என்பவர்களால் 4951 ஆம் இலக்க அடைவுச்சீட்டின் பிரகாரம் இவ்வங்கிக்கு ஈடுவைக்கப்பட்டுள்ள சொத்தையும் வீட்டையும் பொது ஏலத்தில் விற்க்பட வேண்டும் என 1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க (திருததச்) சட்டப்படி 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29 ஆம் பிரிவின் பிரகாரம் வழங்கியுள்ள அதிகாரத்திற்கிணங்க மக்கள் வங்கியின் பணிப்பாளர் சபை இத்தால் தீர்மானிக்கின்றது."

**ஈடுவைக்கப்பட்ட ஆதனங்களின் விவரணம்**

வடமேல் மாகாணத்தில், புத்தளம் மாவட்டத்தில், சிலாபம் காணிப் பதிவுப் பிரிவிற்குரிய, ஆரச்சிக்கட்டு பிரதேச வருமான உத்தியோகத்தர் பிரிவில், கிரிவெல்கெலே எனும் கிராமத்தில் அமைந்துள்ள, நிலஅளவை நாயகத்தினால் தயாரிக்கப்பட்டு அவர் பொறுப்பில் இருக்கும் இலக்கம் பீ. பீ. பு. 158 உடைய வரைபடத்திற்கிணங்க 34 ஆம் இலக்கத் தொகுதியாகிய அரசுக்குரிய காணித்துண்டுக்கு எல்லைகள் - வடக்கில் : மேற்சொன்ன வரைபடத்தின்படி 13 ஆம் இலக்கத்தொகுதி; கிழக்கில் : மேற்சொன்ன வரைபடத்தின்படி 42 ஆம் இலக்கத் தொகுதி ; தெற்கில் : மேற்சொன்ன வரைபடத்தின்படி 41 ஆம் மற்றும் 35 ஆம் இலக்கத் தொகுதிகள் ; மேற்கில் : மேற்சொன்ன வரைபடத்தின்படி 33 ஆம் இலக்கத் தொகுதி. ஆகிய எல்லைகளினால் சூழ்ந்த பிரமாணத்தில் ஒரு ஏக்கர் பூஜ்யம் றூட் நான்கு பேர்ச்சஸ்கள் (1ஏ. 0றூ. 4பே.) அல்லது ஹெக்டயார் பூஜ்யம் தசம் நான்கு ஒன்று நான்கு எட்டு (ஹெக். 0.4148) விஸ்தீரணமுள்ள காணியும், மற்றும் இக்காணியில் இருக்கும் மரமட்டை, பழவகை, கட்டிடங்கள் ஆகிய அனைத்தும் அடங்கும்.

இக்காணி சிலாபம் காணிப்பதிவு அலுவலகத்தில் R 35/127 ஆம் இலக்கத்தன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

மேற்சொன்ன காணியை மீண்டும் அளந்து கீழக் குறித்தவாறு தயாரிக்கப்பட்டுள்ளது:-

மேற்சொன்ன கிரிவெல்கெலே எனும் கிராமத்தில் அமைந்துள்ள, "கிறிவெல்கெலே" எனும் காணிக்கு எம். குணசேகர அதிகாரம் பெற்ற நிலஅளவையாளரினால் 1995.07.21 ஆந் திகதி அளந்து பிரித்து வேறாக்கப்பட்டு தயாரிக்கப்பட்ட 286/ 95 ஆம் இலக்க வரைபடத்திற்கிணங்க 01 ஆம் இலக்கத் தொகுதிக் காணித்துண்டுக்கு எல்லைகள் - வடக்கில் : மு. பீ. பு 158 ஆம் இலக்க வரைபடத்தின்படி 13 ஆம் இலக்கத் தொகுதி ; கிழக்கில் : மு. பீ. பு 158 ஆம் இலக்க வரைபடத்தின்படி 42 ஆம் இலக்கத் தொகுதி ; தெற்கில் : மு. பீ. பு 158 ஆம் இலக்க வரைபடத்தின்படி 41 ஆம் மற்றும் 35 ஆம் இலக்கத் தொகுதிகள் ; மேற்கில் : மு. பீ. பு 158 ஆம் இலக்க வரைபடத்தின்படி 33 ஆம் இலக்கத் தொகுதி. ஆகிய எல்லைகளினால் சூழ்ந்த பிரமாணத்தில் ஒரு ஏக்கர் பூஜ்யம் றூட் நான்கு பேர்ச்சஸ்கள் (1ஏ. 0றூ. 4பே.) அல்லது ஹெக்டயார் பூஜ்யம் தசம் நான்கு ஒன்று நான்கு எட்டு (ஹெக். 0.4148) விஸ்தீரணமுள்ள காணியும், மற்றும் இக்காணியில் இருக்கும் மரமட்டை, பழவகை, கட்டிடங்கள் ஆகிய அனைத்தும் அடங்கும்.

மேற்சொன்ன காணிக்கு உட்செல்வதற்காக தென் எல்லையில் காட்டப்பட்டுள்ளபடி மு. பீ. பு 158 ஆம் இலக்க வரைபடத்தில் 41 ஆம் இலக்கத் தொகுதியாகிய பாதையின் பாதையுரிமை உடனாகும்.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

பிரதேச முகாமையாளர்,
புத்தளம்.

மக்கள் வங்கி,
பிரதேச தலைமை அலுவலகம்,
இல. 79, மாறவில பாதை,
நாததாண்டிய.

8-350

---

**மக்கள் வங்கி - மாத்தறை உயன்வத்தைக் கிளை**

1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி என்னும் பிரிவின் கீழான தீர்மானம்

1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி என்னும் பிரிவின்கீழான தீர்மானம் மக்கள் வங்கிப் பணிப்பாளர் சபையால் 30.10.2009 ஆந் திகதி நடைபெற்ற அவர்களது கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது:-

"உபாலி ஜயந்த டி லனாறொல் என்பவர், மக்கள் வங்கி சார்பில் மாத்தறையைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு எம். ஜி. சி. அரோஷினி என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2008, ஏப்பிறல் 10 ஆந் திகதிய 105 ஆம் இலக்க முறி மீது வருமதியாக உள்ள கொடுப்பனவில் தவணை தவறியுள்ளாராதலாலும், சொல்லப்பட்ட 105 ஆம் இலக்க ஈட்டு முறி மீது இரண்டு இலட்சத்து முப்பதாறாயிரத்து ஐநூற்று அறுபது ரூபா தொண்ணூற்று நான்கு சதம் (ரூ. 2,36,560.94) மாத்திரம் கொண்ட பணத்தொகையொன்று தற்போது சொல்லப்பட்ட மக்கள் வங்கிக்கு வருமதியாக வரவேண்டியுள்ளது.

சொல்லப்பட்ட இரண்டு இலட்சத்து முப்பதாறாயிரத்து ஐநூற்று அறுபது ரூபா தொண்ணூற்று நான்கு சதம் (ரூ. 2,36,560.94) மாத்திரம் கொண்ட பணத்தொகையையும் அத்துடன் இரண்டு இலட்சத்து முப்பதாறாயிரத்து ஐநூற்று அறுபது ரூபா தொண்ணூற்று நான்கு சதம் (ரூ. 2,36,560.94) கொண்ட மீது 18.11.2008 ஆந் திகதி முதல் விற்பனைத் திகதி வரை ஆண்டொன்றுக்கு இருபத்து மூன்று சதவீதப் (23%) படியான வட்டியையும் ஏலவிற்பனைச் செலவுகளையும் சொல்லப்பட்ட மக்கள்

வங்கிச் சட்டத்தின் '29L' என்னும் பிரிவின் கீழ் அறவிடற்பாலதான பணங்களையும் அதன் பின்னர் கொடுப்பனவு (எவையும்) பெறப்பட்டிருப்பின் அவற்றைக் கழித்து அறவிடுவதற்காக, சொல்லப்பட்ட 105 ஆம் இலக்க ஈட்டுமுறி மூலம் சொல்லப்பட்ட மக்கள் வங்கிக்கு ஈடுவைக்கப்பட்ட ஆதனமும் வளவுகளும் மாத்தறையைச் சேர்ந்த உரிமம் பெற்ற ஏலவிற்பனைக்காரர் ஜி. பி. ஆனந்த என்பவரால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டுமென மக்கள் வங்கிப் பணிப்பாளர் சபை 1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்ட வாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தால் அதற்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின்கீழ் இத்தால் தீர்மானிக்கின்றது."

### ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின் விவரணம்

தென் மாகாணம், மாத்தறை மாவட்டம், மாத்தறையின் நாலு கிறெவெற்றுக்குள் வேவஹமன்துவ என்னுமிடத்தில் அமைந்துள்ள கேமனகடமுல்லேவத்தை மறுபெயர் ஜயசேகரகே ஹேனவத்தை என அழைக்கப்படும் காணியின் காணித்துண்டு $D^{9}$ இன் அப்பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட காணித்துண்டு $D^{9/1}$ முழுவதும். அத்துடன் அச்சொல்லப்பட்ட காணித்துண்டு $D^{9/1}$ இன் எல்லைகள் - வடக்கு : 8 அடி அகல வீதியொன்றான காணித்துண்டு $D^{8}$ ; கிழக்கு : அதே காணியின் காணித்துண்டு E மற்றும் காணித்துண்டு F ; தெற்கு : 1283 A என்னும் இலக்க வரைபடத்தில் உள்ள காணித்துண்டு $D^{9/2}$ ; வடமேற்கு : காணித்துண்டு $D^{9/2}$ , அத்துடன் மாத்தறை மாவட்டக் காணிப் பதிவகத்தில் A464/63 இல் செய்யப்பட்டதும் உரிமம் பெற்ற நிலஅளவையாளர் எம். விதானகமாச்சி என்பவரால் தயாரிக்கப்பட்ட 04.08.2003 ஆந் திகதிய 1283 ஆம் இலக்க வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளதும் ஏழு பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 7பே.) விஸ்தீரணம் கொண்டதுமான காணி, அதிலுள்ள எல்லா கட்டிடங்கள், பயிர்வகைகள், மற்றும் எல்லாவற்றுடனும் சேர்த்து.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

பிரதேச முகாமையாளர்,
(மாத்தறை).

மக்கள் வங்கி,
பிரதேச தலைமை அலுவலகம்,
இலக்கம் 38/1ஏ , எஸ்பிளனேட் வீதி,
மாத்தறை.

8-351

---

## இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கி

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கியினால் வழங்கப்பட்ட கடன்களை அறவீடு செய்வதற்கான (விஷேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழான தீர்மானம்*

கடன் இலக்கம் : P020000001
கடனாளியின் முழுப்பெயர் : ராஜகுரு முதியன்சேலாகே ஜயதிலக்க

"கம்பஹாவைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு டி. டபிள்யூ. விஜேசிங்ஹ என்பவரினால் எழுதி உறுதிசெய்யப்பட்ட 691 ஆம் இலக்கத்தையும் 2006.10.09 ஆந் திகதியையும் கொண்ட அடகுப் பத்திரத்தின் மூலம் இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள ஆதனம் இதன் பிறகு 'வங்கி' என்று அழைக்கப்படும் (2003 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன சட்டத்தினால் திருத்தப்பட்ட) 1997 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன சட்டத்தினால் உருவாக்கப்பட்ட, இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கிக்கு மேற்குறிப்பிட்ட கடனாளியினால், அடகு வைக்கப்பட்டதன் பின்பு பெற்றுக் கொண்ட கடனை வங்கிக்கு செலுத்த வேண்டிய கடனுக்கான தவணைப் பணத்தினை செலுத்த தவறியுள்ளார்.

மேற்குறிப்பிட்ட அடமான பத்திரத்தின்கீழ் இரண்டு கோடி இருபத்தைந்து இலட்சத்து ஐயாயிரத்து எண்ணூற்று எழுபத்தைந்து ரூபா நாற்பத்து மூன்று சதம் (ரூபா 2,25,05,875.43) 2012.04.30 ஆந் திகதி வரை இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கிக்கு கிடைக்க வேண்டியிருப்பதால்-

1. குறிப்பிட்ட கடன் தொகையில் மீளச் செலுத்தப்படாத முழுத்தொகையான தொண்ணூற்று ஐந்து இலட்சம் ரூபாவையும் (ரூபா 95,00,000.00) அதற்கான 2012.04.30 ஆந் திகதி வரையிலான வட்டியாக ஒரு கோடி முப்பது இலட்சத்து ஐயாயிரத்து எண்ணூற்று எழுபத்தைந்து ரூபா நாற்பத்து மூன்று சதத்தினையும் (ரூபா 1,30,05,875.43) இதன்படி மொத்தமாக இரண்டு கோடி இருபத்தைந்து இலட்சத்து ஐயாயிரத்து எண்ணூற்று எழுபத்தைந்து ரூபா நாற்பத்து மூன்று சதத்தினை (ரூபா 2,25,05,875.43) அறவீடு செய்யவும் ;

2. குறிப்பிட்ட தொண்ணூற்று ஐந்து இலட்சம் ரூபாவுக்காக (ரூபா 95,00,000.00) அறவீடு செய்ய வேண்டிய 36% வீதமான வருடாந்த வட்டியினை 2012.05.01 ஆந் திகதியிலிருந்து சொத்தினை பகிரங்க ஏலத்தில் விற்கப்படும் திகதி வரைக்கும் (அந்த இரண்டு தினங்களும் அடங்கலாக) மீள அறவீடு செய்து கொள்வதற்காகவும் ;

3. 1990 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க வங்கியின் மூலம் வழங்கப்பட்ட கடனை அறவீடு செய்யும் விஷேட ஏற்பாடுகள் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் கீழ் அறவீடு செய்யத்தக்க பணம் மற்றும் கட்டணங்களை அறவீடு செய்து கொள்வதற்கும் (இதுவரையில் ஏதாவது பணம் செலுத்தப்பட்டிருந்தால் அவற்றைக் கழித்த பின்பு) மேற்குறிப்பிட்ட அடமானப் பத்திரத்தின் மூலம் இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கிக்கு அடகு வைக்கப்பட்டுள்ள இங்கு கீழ் குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள ஆதனம் மற்றும் வளவு, பகிரங்க ஏல விற்பனையாளர் டபிள்யூ. எம். விக்கிரமரத்ன என்பவரின் மூலம் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டும் என 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கியினால் வழங்கப்பட்ட கடன்களை அறவீடு செய்தல் (விஷேட ஏற்பாடுகள்) சட்டத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி, இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கியின் பணிப்பாளர்கள் சபையினால் 2012 ஆம் ஆண்டு யூன் மாதம் 08 ஆந் திகதி நடைபெற்ற பணிப்பாளர் சபைக் கூட்டத்தின்போது ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டுள்ளது."

### அட்டவணை

மேல் மாகாணத்தில் கம்பஹா மாவட்டத்தில், ஹாப்பிட்டிகம் கோரளையில் யட்டிகஹ பத்துவவில் திவுலப்பிட்டிய பிரதேச சபை எல்லையில் கொட்டதெனியாவ (முன்னர் எராபத்த) என்ற இடத்தல் அமைந்துள்ள தெல்லஹவத்த மற்றும் கோங்கஹவத்த என்ற காணிக்கு 2005.06.08 ஆந் திகதி அனுமதிபெற்ற நிலஅளவையாளர்

டீ. என். காதர் என்பவரினால் அளந்து தயாரிக்கப்பட்ட 4002/05 ஆம் இலக்க காணிவரைபடத்தின்படி காணித்துண்டிலக்கம் 1, 2, 3, 4, 5, 5, 7, 8, 9, 10, 11, 12 மற்றும் 13 ஆம் இலக்க காணித்துண்டுகளின் எல்லைகளாக - வடக்கே : எஸ். ஏ. பீ. அப்புஹாமி என்பவருக்கு சொந்தமான காணியும் ; கிழக்கே : கே. ஜேமிஸ் அப்புஹாமி என்பவருக்கு சொந்தமான காணியும் ; தெற்கே : டி. பீ. டி. திசானாயக்கா என்பவருக்குச் சொந்தமான காணியும் ; மேற்கே : கொட்டதெனியாவில் இருந்து மீரிகம வரையிலான பாதையும் அமைந்து காணப்படுகின்றன. இக்காணித்துண்டுகளின் மொத்த பரப்பளவு மீரிகம வரையிலான பாதையும் அமைந்து காணப்படுகின்றன. இக்காணித்துணடுகளின் மொத்த பரப்பளவுஒரு ஏக்கர் ஒரு றூட் இருபத்தாறு பேர்ச்சுகளாகும். (0ஏ. 1றூ. 26பே.). இக்காணித்துண்டும் இதில் காணப்படும் கட்டிடம், மரங்கள் மற்றும் ஏனைய அனைத்துடன் நீர்கொழும்பு அலுவலகத்தில் D 223/04 என்ற தலைப்பின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளன.

மேற்குறிப்பிட்ட கொட்டதெனியாவ என்ற இடத்தில் அமைந்துள்ள மேற்குறிப்பிட்ட தெல்லஹவத்த மற்றும் கோங்கஹவத்த என்ற காணிக்கு மேற்குறிப்பிட்ட 4002/05 ஆம் இலக்க காணிவரைபடத்தின்படி பிரித்து வேறாக்கம் செய்யப்பட்ட 2 ஆம் இலக்க காணித்துண்டின் எல்லைகளாக- வடக்கே : 1 ஆம் இலக்க காணித்துண்டும் ; கிழக்கே : 4 ஆம் இலக்க காணித்துண்டும் ; தெற்கே : 3 ஆம் இலக்க காணித்துண்டும் ; மேற்கே: பாதையும் அமைந்து காணப்படுகின்றன. இதன் பரப்பளவு பதினைந்து பேர்ச்சுகளாகும். (0ஏ. 0றூ. 15பே.). இக்காணித்துண்டும் இதில் காணப்படும் வீடு மற்றும் ஏனையவைகளும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

மேற்குறிப்பிட்ட கொட்டதெனியாவ என்ற இடத்தில் அமைந்துள்ள மேற்குறிப்பிட்ட தெல்லஹவத்த மற்றும் கோங்கஹவத்த என்ற காணிக்கு மேற்குறிப்பிட்ட 4002/05 ஆம் இலக்க காணிவரைபடத்தின்படி பிரித்து வேறாக்கம் செய்யப்பட்ட 3 ஆம் இலக்க காணித்துண்டின் எல்லைகளாக - வடக்கே : 2 ஆம் இலக்க காணித்துண்டும் ; கிழக்கே : 4 ஆம் இலக்க காணித்துண்டும் ; தெற்கே : 8 ஆம் இலக்க காணித் துண்டும் ; மேற்கே : பாதையும் அமைந்து காணப்படுகின்றன. இதன் பரப்பளவு பதினைந்து தசம் ஒரு பேர்ச்சுகளாகும். (0ஏ. 0றூ. 15.1பே.). இக்காணித்துண்டும் இதில் காணப்படும் வீடு மற்றும் ஏனையவைகளும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

மேற்குறிப்பிட்ட கொட்டதெனியாவ என்ற இடத்தில் அமைந்துள்ள மேற்குறிப்பிட்ட தெல்லஹவத்த மற்றும் கோங்கஹவத்த என்ற காணிக்கு மேற்குறிப்பிட்ட 4002/05 ஆம் இலக்க காணிவரைபடத்தின்படி பிரித்து வேறாக்கம் செய்யப்பட்ட 4 ஆம் இலக்க காணித்துண்டின் எல்லைகளாக - வடக்கே : 1 ஆம் இலக்க காணித்துண்டும் ; கிழக்கே : 5 ஆம் இலக்க காணித்துண்டும் ; தெற்கே : 8 ஆம் இலக்க காணித் துண்டும் ; மேற்கே : 2 ஆம், 3 ஆம் இலக்க காணித்துண்டுகளும் அமைந்து காணப்படுகின்றன. இதன் பரப்பளவு பதினேழு பேர்ச்சுகளாகும். (0ஏ. 0றூ. 17பே.). இக்காணித்துண்டும் இதில் உள்ள வீடு மற்றும் ஏனையவைகளும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

மேற்குறிப்பிட்ட கொட்டதெனியாவ என்ற இடத்தில் அமைந்துள்ள மேற்குறிப்பிட்ட தெல்லஹவத்த மற்றும் கோங்கஹவத்த என்ற காணிக்கு மேற்குறிப்பிட்ட 4002/05 ஆம் இலக்க காணிவரைபடத்தின்படி பிரித்து வேறாக்கம் செய்யப்பட்ட 5 ஆம் இலக்க காணித்துண்டின் எல்லைகளாக - வடக்கே : 1 ஆம் இலக்க காணித்துண்டும் ; கிழக்கே : 6 ஆம் இலக்க காணித்துண்டும் ; தெற்கே : 8 ஆம் இலக்க காணித்துண்டும் ; மேற்கே : 5 ஆம் இலக்க காணித்துண்டும் அமைந்து காணப்படுகின்றன. இதன் பரப்பளவு பதினெட்டு பேர்ச்சுகளாகும். (0ஏ. 0றூ. 18பே.). இக்காணித்துண்டும் இதில் உள்ள வீடு மற்றும் ஏனையவைகளும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

மேற்குறிப்பிட்ட கொட்டதெனியாவ என்ற இடத்தில் அமைந்துள்ள மேற்குறிப்பிட்ட தெல்லஹவத்த மற்றும் கோங்கஹவத்த என்ற காணிக்கு மேற்குறிப்பிட்ட 4002/05 ஆம் இலக்க காணிவரைபடத்தின்படி பிரித்து வேறாக்கம் செய்யப்பட்ட 6 ஆம் இலக்க காணித்துண்டின் எல்லைகளாக - வடக்கே : 1 ஆம் இலக்க காணித்துண்டும் ; கிழக்கே : 7 ஆம் இலக்க காணித்துண்டும் ; தெற்கே : 8 ஆம் இலக்க காணித்துண்டும் ; மேற்கே : 6 ஆம் இலக்க காணித்துண்டும் அமைந்து காணப்படுகின்றன. இதன் பரப்பளவு பதினேழு பேர்ச்சுகளாகும். (0ஏ. 0றூ. 17பே.). இக்காணித்துண்டும் இதில் உள்ள வீடு மற்றும் ஏனையவைகளும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

மேற்குறிப்பிட்ட கொட்டதெனியாவ என்ற இடத்தில் அமைந்துள்ள மேற்குறிப்பிட்ட தெல்லஹவத்த மற்றும் கோங்கஹவத்த என்ற காணிக்கு மேற்குறிப்பிட்ட 4002/05 ஆம் இலக்க காணிவரைபடத்தின்படி பிரித்து வேறாக்கம் செய்யப்பட்ட ஆம் இலக்க காணித்துண்டின் எல்லைகளாக - வடக்கே : 1 ஆம் இலக்க காணித்துண்டும் ; கிழக்கே : ஜே. ஜே. அப்பஹாமி என்பவருக்குச் சொந்தமான காணியும் ; தெற்கே : 8 ஆம் இலக்க காணித்துண்டும் ; மேற்கே : 6 ஆம் இலக்க காணித்துண்டும் அமைந்து காணப்படுகின்றன. இதன் பரப்பளவு பதினெட்டு தசம் மூன்று பேர்ச்சுகளாகும். (0ஏ. 0றூ. 18.3பே.). இக்காணித்துண்டும் இதில் உள்ள வீடு மற்றும் ஏனையவைகளும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

மேற்குறிப்பிட்ட கொட்டதெனியாவ என்ற இடத்தில் அமைந்துள்ள மேற்குறிப்பிட்ட தெல்லஹவத்த மற்றும் கோங்கஹவத்த என்ற காணிக்கு மேற்குறிப்பிட்ட 4002/05 ஆம் இலக்க காணிவரைபடத்தின்படி பிரித்து வேறாக்கம் செய்யப்பட்ட 10 ஆம் இலக்க காணித்துண்டின் எல்லைகளாக - வடக்கே : 8 ஆம் இலக்க காணித்துண்டும் ; கிழக்கே : 9 ஆம் இலக்க காணித்துண்டும் ; தெற்கே : டி. பீ. திசாநாயக்க என்பவருக்குச் சொந்தமான காணியும் ; மேற்கே : 11 ஆம் இலக்க காணித்துண்டும் அமைந்து காணப்படுகின்றன. இதன் பரப்பளவு இருபது பேர்ச்சுகளாகும். (0ஏ. 0றூ. 20பே.). இக்காணித்துண்டும் இதில் உள்ள வீடு மற்றும் ஏனையவைகளும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

மேற்குறிப்பிட்ட கொட்டதெனியாவ என்ற இடத்தில் அமைந்துள்ள மேற்குறிப்பிட்ட தெல்லஹவத்த மற்றும் கோங்கஹவத்த என்ற காணிக்கு மேற்குறிப்பிட்ட 4002/05 ஆம் இலக்க காணிவரைபடத்தின்படி பிரித்து வேறாக்கம் செய்யப்பட்ட 11 ஆம் இலக்க காணித்துண்டின் எல்லைகளாக - வடக்கே : 8 ஆம் இலக்க காணித்துண்டும் ; கிழக்கே : 10 ஆம் இலக்க காணித்துண்டும் ; தெற்கே : டி. பீ. திசாநாயக்க என்பவருக்குச் சொந்தமான காணியும் ; மேற்கே : 12 ஆம், 13 ஆம் இலக்க காணித்துண்டுகளும் அமைந்து காணப்படுகின்றன. இதன் பரப்பளவு இருபது தசம் ஒன்பது பேர்ச்சுகளாகும். (0ஏ. 0றூ. 20.9பே.). இக்காணித்துண்டும் இதில் உள்ள வீடு மற்றும் ஏனையவைகளும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

பொது முகாமையாளர்.

8-416

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.